இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார்.அவர்களுக்குத் தீய ஆவிகள்மீது அதிகாரமும் அளித்தார். மேலும், “பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக்கொண்டு போகவேண்டாம். ஆனால் மிதியடி போட்டுக்கொள்ளலாம்; அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். (மாற்கு 6:7-9)

# போரை விரும்பும் இதயங்கள் அமைதியையும் உரையாடலையும் விரும்பட்டும்!

கடந்த ஜூன் 30 அன்று, போரை விரும்பும் மனிதர்களின் இதயங்களைத் திருஇருதய ஆண்டவர் தொட சிறப்பாக இறை வேண்டல் செய்வோம் என்றும், அவ்விதயங்கள் உரையாடல் மற்றும்



அமைதியின் செயல்பாடுகளைச் செய்யவும், மனம் மாறவும் மன்றாடுவோம் என்றும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான் சிஸ்.

ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் வளாகத்தில் வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையைத் தொடர்ந்து இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூடியிருந்த அனைத்து திருப்பயணிகளையும் வாழ்த்தினார்.

உரோம் நகரத்தார், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திருப்பயணிகள், போலந்தில் உள்ள மறைப்பணித்தளத்தில் உள்ள குழந்தைகள், கலிஃபோர்னியா மற்றும் ஐவரி கோஸ்ட் பகுதி திருப்பயணிகள் அனைவரையும் வாழ்த்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவைப் புதல்வியர் சபை அருள் சகோதரிகளை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், வணக்கத்திற்குரிய மரியா ஒலிவா பொனால்டோவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி பொது நிலையினருடன் அந்த கோதரிகள் மேற்கொண்ட திருயாத்திரை யையும் நினைவுகூர்ந்தார். மாந்தோவாவில் இருக்கக்கூடிய கொன்சாகா மாணவர்களை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், உரோமானிய போர்வீரர்களுக்காகவும் இறைவேண்டல் செய்ய கேட்டுக்கொண் டார்
.

உலகின் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்தவ நம்பிக்கையின் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண் டிருக்கும் மக்கள், தங்கள் வாழ்வால் திருஅவைக்கு உரமிடுகின்றனர் என்றும், இத்தகைய மக்களைக் காக்க பாடுபடும் வீரர்களை ஆதரிப்போம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உக்ரைன், பாலஸ்தீனம், இஸ்ரேல், மியான்மர் மற்றும் போரினால் பல துன்பங்களுக்கு ஆளான பல இடங்களில் வாழும் மக்களை மறந்து விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூடியிருந்த அனைவருக்கும் வாழ்த்துக் கூறி தன் மூவேளை செப உரையைத் தொடர்ந்த செப விண்ணப் பங்களையும் வாழ்த்துக்களையும் நிறைவு செய்தார்.

நிறைவாக, இறைவேண்டலின் தன்மை குறித்துக் கருத்துரைத்த அவர், இறை வேண்டல் என்பது, நமது வாழ்க்கையை உந்திச்செல்ல வைக்கும் ஆற்றல் பெற்றது என்றும். நமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளிலிருந்து நம்மை தூரமாக வைத்திருக்க உதவுகின்றது என்றும், நமது சொந்த ஆற்றல் கொண்டு நம்மால் தொலைதூரத்திற்கு செல்ல முடியாது என்றும் விவரித்தார். ‘நாம் தான்’ என்று நினைத்தோமானால் நாம் விரைவில் தோல்வியடைவோம் என்பதே திருத் தந்தையின் வலியுறுத்தலாகும். .கடவுளின் அன்பான பார்வையின் ஒளியில், அவரிடமிருந்து வரும் மனவுறுத்தியுடனும் வலிமையுடனும் ஒவ்வொரு சூழ்நிலை யையும் எதிர்கொள்வதில் கிறிஸ்தவரின் மகிழ்ச்சி தங்கியுள்ளது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

## யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச் சுடரும், உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்பு வனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய' எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்ப தாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

‘எதிர்நோக்கின் திருப்பயிணிகள்’

## கோலாலம்பூர் மாமறைமாவட்ட தமிழ் திருத்தூது ஆணையம் மெந்தகாப்பில் சந்திப்புக் கூட்டம் நடத்தியது

கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறை மாவட்ட தமிழ் திருத்தூது ஆணையத்தின் பொறுப்பாளர்கள் கடந்த ஜூன் திங்கள் 6ம் நாள், கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மெந்தகாப், இடைவிடா சகாய அன்னை பங்கில் அவர்களின் முதல் சந்திப்பை நடத்தினர். கிள்ளான் லூர்து அன்னை பங்கைச் சேர்ந்த சகோ. யேசுதாஸ் அந்தோணிசாமி, சகோ. நேச தேவசகாயம், பூச்சோங் குவாடலூப்பே அன்னை பங்கின் சகோ. பிரான்சிஸ் தோமஸ், கெப்போங், கிறிஸ்துவின் ஒளி பங்கின் சகோதரி என் பால், பெட்டாலிங் ஜெயா, புனித இஞ்ஞாசியார் ஆலயத்தை சேர்ந்த சகோ. பெர்னார்ட் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

காலை திருப்பலியோடு அருட்பணி தெரன்ஸ் தோமஸ், அவர்களின் ஆசீருடன் இனிதே சந்திப்புக் கூட்டம் தொடங்கியது. இடைவிடா சகாய அன்னை பங்கின் பொறுப்பாளர் சகோ, அந்தோணி பலவேந்திரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று சிறப்புரை ஆற்றினார்.

கோலாலம்பூர் மாமறைமாவட்ட தமிழ்



திருத்தூது ஆணையத்தின் பொறுப்பாளர் சகோ. யேசுதாஸ் அந்தோணிசாமி அவர்கள் மலேசிய திருஅவையின் தூர நோக்கு மற்றும் பணிக்குழுவின் பொறுப்பு களையும் சிறப்பாக பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து தமிழ் அப்போஸ்தல பணிக்குழுவின் உருவாக்க வரலாற்றை பற்றியும் விளக்கினார். தொடர்ந்து, சகோ. பிரான்சிஸ் தோமஸ் அவர்கள் கூட்டு ஒருங்கியக்கத் திருஅவை (Synodal Church) பற்றி மிகவும் சிறப்பாக விளக்கினார்.

இறுதியாக இளைஞர்கள் ஒரு குழுவாகவும் பெரியவர்கள் ஒரு குழுவாகவும் சேர்ந்து பல கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அருள்பணி தெரன்ஸ் தோமஸ் அவர்களின் ஆசீரோடு இந்த நிகழ்வு இனிதே ஒரு முடிவை எய்தியது.

*நேச தேவசகாயம் - லூர்து அன்னை கிள்ளான்*

# மண்ணின் மைந்தர் 'அருளாளர், புனிதர் உயர் நிலைக்கு உயர்த்தப்பட ஆய்வு அறிக்கைகள்

பேராக், பாப்பான் எனும் நகரில் சிபில் கார்த்திக்கேசு என்பவர் நோய்வாய்ப்பட்டு துன்புற்றோர் மத்தியில் மத்தியில் அன்பு மற்றும் இரக்கம் மிகு சேவையில் ஆழ்ந்து ஈடுபட்டவர். அவரது வாழ்க்கை வரலாறு இன்று வரை சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களாலும் உணரப்பட்டு நினைவு கூரப்படுகிறது என்றால் மிகையாகாது.

சிபில் கார்த்திக்கேசு இந்தோனேசியாவில் பிறந்தவர், ஜப்பானிய மலாயா ஆக்கிரமிப்பின் போது, அவர் தனது கணவர் டாக்டர் அப்டன் கிளெமென்ட் கார்த்திக்கேசுவுடன் பேராக்கின் பாப் பானில் இலவச மருத்துவ மனையை



நடத்தி வந்தார்.

அவர் அனைத்து கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகள் கடந்த நிலையில், மக்களை அன்புப்பணி அர்ப்பண வாழ்வுக்கு ஊக்குவிக்கலானார். இன்று, கலை படைப்புகள், நாடகங்கள், ஆவணப் படங்கள் மூலம் இன்றைய தலைமுறை யினரை ஊக்குவிக்கும் வகையில் இவரைக் குறித்த திரைப்படங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

ஆய்வுத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களின் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளின் ஒரு பகுதி அவரது வாழ்க்கை மற்றும் பணிகளில் ஆர்வம் காட்டியது ஆய்வுத் துறையில் பலன் அளித்துள்ளது என்றே கூறவேண்டும்.

ஆங்கிலிகன், கத்தோலிக்கள் மற்றும் இதர கிறிஸ்தவர்கள் நற்செய்திக்கு ஏற்ப வாழ கிறிஸ்தவர்களின் நற்செய்தியைப் பின்பற்றி வாழ்வதற்குத் தூண்டு கோளாகவும் இவர் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மறைத்தூது ஆண்டில் (2019) மறைத்தூதுப் பணி வாழ்வுக்குச் சாட்சியாக இருந்த 5 பேரில் ஒருவராக இவரும் தேர்வுச் செய்யப்பட்டது, பினாங்கு அமல உற்பவ அன்னை ஆலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டது. அடுத்து, பினாங்கு மறைமாவட்டத்தின் பத்து காஜா, புனித யோசேப்பு பங்கு ஆலயத்தின் ஓர் இறக்கைப் பகுதி இவர் நினைவாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மலேசிய மறைக்கல்வி தொடர் வரிசையின் 7 ஆம் ஆண்டுக்கான நூலில் இவருக்கென்று ஒரு பாடப்பகுதி ஒதுக் கப்பட்டுள்ளது. திருப்பயணிகள் இவரது கல்லறைக்கு வந்து அஞ்சலி செலுத்தும் வண்ணம் இருக்கிறார்கள். இப்பகுதி கத்தோலிக்க இறைமக்கள் தங்கள் குழந்தைகளின் திருமுழுக்கு வேளையில் இவது பெயரான 'சிபில்' எனும் பெயரைச் சூட்டுவதும் வழக்கமாகி வருகிறது.

சிபில் கார்த்திகேசு ஜூன் 12, 1948 ல் இறந்தார் அவரது உடல் ஈப்போவின் புனித மிக்கேல் தேவாலயத்தில் உள்ள கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இப்போது இவர் மறைந்து 76வது வருடம் ஆகிறது. இவரது குடும்பத்தார் இவருக்கு ஊட்டிய நம்பிக்கை வாழ்வுதான் இவருடை தியாக வாழ்வுக்கு உதவியது என்று துணிந்து கூறலாம்.

வீரம் மற்றும் துணிச்சலுக்கான புகழ்பெற்ற ஜார்ஜ் பதக்கத்தை (GM) பெற்ற ஒரே மலேசிய பெண்மணி சிபில் மட்டுமே என்பது மற்றொரு விபரமாகும்.

நிறைவாக, கடவுளின் அருளையும், இயேசு வின் அன்பையும் சார்ந்திருந்த ஆன்மீகம், இவரது வாழ்க்கையில் நம்பிக்கையொளி எழுப்பியது. இவரது அர்ப்பணிப்பு வாழ் வானது இவரை அருளாளராகத் தேர்வுச்செய்ய உதவியாக இருக்கும் என்று நம்புவோம் அதற்கான கூடுதல் மற்றும் ஆழமான ஆய்வுப்பணிகளளை மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்க கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் அனுமதியின் பேரில், அருள்பணி யூஜின் பெனடிக்ட் அவர்கள் நியமனம் பெற்றுள் ளார்.

இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்த இவர் வழியாக ஒரு அற்புதம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது நிபந்தனை.

-ஆர்.கே.

# நீதியான அமைதியைப் பெற அமைதிப் பேச்சுவார்த்தையே வழி

**வத்திக்கான்** : சுவிட்சர்லாந்தில் அண்மை யில் இடம்பெற்ற, உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவது குறித்த உயர்மட்ட நிறையமர்வுக் கூட்டத்தில் திருப்பீடத்தின் சார்பில் உரையாற்றிய கர்தினால் பரோலின் அவர்கள், அமைதியைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தையே ஒரேவழி




என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தியதுடன், உக்ரைன் மற்றும் இரஷ்யத் தலைவர் களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கும் வத்திக்கான், இருதரப்பினரிடையே அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிக்க எப்போதும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பார்வையாளர் என்ற தகுதியுடன் வத்திக்கான் சார்பில் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையும் ஆற்றிய திருப்பீடச் செயலர், ஆக்ரமிப்பிலிருந்து தன்னை காத்துக்கொள்ள அனைத்து முயற்சிகளையும் எடுத்துவரும் உக்ரைன் நாடு, அமைதிக்கான அரசியல் மட்ட முயற்சிகளையும் தொடர்ந்து வருவது குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட் டார்.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் மனிதகுல பேரழிவு குறித்து திருப்பீடம் மிகுந்த அக்கறைக் கொண்டுள்ளதாகவும், போர் பகுதிகளிலிருந்து குழந்தைகளை வெளி யேற்றவும், போர்க்கைதிகளின் விடுதலைக் கும், காயமுற்ற போர்வீரர்கள் மற்றும் பொதுமக்களை சிகிச்சைக்கென வெளியே கொணர்வதற்கும் தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் திருப்பீடம் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்தார் கர்தினால் பரோலின்.
உக்ரைனில் அமைதி குறித்த உயர்மட்டக் கூட்டத்தில் வத்திக்கான் சார்பில் இடம்பெற்ற குழுவில் திருப்பீடச்செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின், சுவிட்சர்லாந்திற்கான திருப்பீடத் தூதுவர் Martin Krebs, திருப்பீடத்தூதரக அதிகாரி பேராயர் Paul Butnaru, ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சுவிஸ் கூட்டமைப்பின் தலைவர், மற்றும் உக்ரைன் அரசுத் தலைவரின் அழைப்பின் பேரில் திருப்பீடக்குழு இந்த உயர் அமர்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டது.

## உலக தாத்தா பாட்டிகள் தினம் 28-07-2024



# இறைப் பற்றால் உலகப் பற்றை வெல்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 15-ஆம் ஞாயிறு. முதல்வாசகத்தில், ஆண்டவரால் அழைக்கப்பட்ட ஆமோஸ், வடநாட்டிற்குச் சென்று ஆண்டவர் தன்னிடம் சொன்னது போன்று இறைவாக்கு உரைக்கின்றார். அவரது அறிவுறுத்தலை ஏற்காத பெத்தேலில் இருந்த அமாட்சியா என்ற குரு, ஆமோசை அங்கிருந்து விரட்டியக் கிறார்.

இரண்டாவது வாசகத்தில் உலகம் தோன்று வதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கி கொள்ள விரும்பினார் என்று பவுல் அடிகள் விவரிக்கிறார்.

நற்செய்தியில் இயேசு இரண்டு உண்மை களை வலியுறுத்துகிறார். ஒன்று, நற்செய்தியை அறிவிப்பவர்கள் பணத்தை அல்ல, கடவுளையே நம்பித் தங்கள் தாதுரைப் பணியை மேற்கொள்ள வேண் டும். இரண்டு, நற்செய்தியைக் கேட்பவர்கள் அதை அறிவிப்பவர்களின் இன்றியமையாதத் தேவைகளை நிறைவு செய்யக் கடமைப் பட்டுள்ளார்கள்.

ஆம், நற்செய்தியை அறிவிப்பவர்கள் கடவுளை மட்டுமே நம்பித் தங்கள் பணியை ஆற்றவேண்டும், செல்வமும் சொத்துக்களும் நற்செய்திப் பணிக்கு மாபெரும் இடையூறாகவும் தடைகளாக வும் இருக்கும் என்பதை மறுக்க இயலாது. பணிக்காலத்தில் சொத்துக்களைக் குவிப் பவர்களுக்கு. இறுதியில் அச்சொத்துக் களைக் கட்டிக் காப்பதற்குத்தான் நேரமிருக்கும்; நற்செய்திப் பணிக்கு நேரமிருக்காது என்பது வெள்ளிடைமலை.

நற்செய்தி அறிவிப்பவர்கள் ஊர் ஊராகச் செல்லவேண்டும். எவ்வளவுக்கு அதிகமாகப் பொருள்கள் அவர்களிடம் உள்ளதோ, அவ்வளவுக்கு அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதற்கு தடைகளாக இருக்கும் என்பதை மறுபதற் கில்லை. எனவே நற்செய்தியாளர்களுக்கு எப்பொழுதும் மனது இலகுவாக இருக்க வேண்டும் என்பதை இயேசு வலியுறுத்து கிறார்.

இந்த பகுதியைப் பற்றி சிந்திக்கும்போது, பன்னிரண்டு பேரின் மனதில் அவர்கள் பயணம் செய்தபோது என்ன நினைத்திருப் பார்கள் என்பதை கற்பனை செய்து பார்ப்போமானால் அவர்களிடம் பணமோ, உணவோ இல்லாததால், பயந்து கவலைப்படத் தொடங்கியிருப்பார்கள். பொழுது சாய்ந்ததும் அவர்களால் இரவைக் கழிக்க சத்திரங்களைத் தேடி அலைய வேண்டியிருக்கும். அவர்களால் சாப்பிட எதுவும் வாங்கவும் முடியாது. இது அவர்களின் கடவுள் நம்பிக்கைக்கு ஒரு சோதனை. அத்தருணத்தில், எங்கிருந்தோ அல்லது யாரிடமிருந்தோ உதவி கிடைக்க நேர்ந்தால், அப்போது கிடைக்கும் கடவுளின் அனுபவம் விவரிக்க முடியாது.

**பொதுக்காலம்-15-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | ஆமோஸ் 7: 12-15 |
| திரு.பாடல் | 85: 8ab,9. 10-11. 12-13 |
| 2-ம் வாசகம் | எபே 1: 3-14 |
| நற்செய்தி | மாற்கு 6: 7-13 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**

பன்னிரண்டு பேரும் எல்லாவற்றிலும் கடவுளின் அருட்கொடையைச் சார்ந் திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது போல, கடவுள் நம்மிடமும் அதையே விரும்புகிறார். நமது பணத்தில் அல்லது வருமானத்தில் சிறிதளவாவது இறைப் பணியாளர்களின் பராமரிப்புக்கு ஒதுக்க வேண்டும். நம்மை நம்பியே கடவுள் தம் பணியாளர்களை வெறும் பையோடு அனுப்புகிறார் என்பதை உணர்ந்து வாழ்வோம்.